# விற்பனை மற்றும் சந்தை வாய்ப்புகளை அதிகரிக்க கைத்தறிக் கண்காட்சிகள் நடத்தப்படும்!

## பேரவையில் அமைச்சர் ஆர்.காந்தி பதிலுரை... 3 ஆம் பக்கத் தொடர்ச்சி

19.1.2022ல் தலைவர் ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடன் செய்துவிட சொன்னார். செய்தாகி விட்டது. அதேபோல் 328 நபர்கள் பயன் பெற்றுள்ளனர். அதேபோல், நிலுவைத்தொகை Gratuity Dues 2013லிருந்து இந்த Gratuity Dues கட்டவே இல்லை. 5 கோடியே 47 இலட்ச ரூபாய். 146 பேருக்கு அது சமீபத்தில் 9.3.2024 அன்று வழங்கப்பட்டது. இப்போதுதான் உறுப்பினர் அருள் அவர்கள் கேட்டார். சேலத்தில் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைக்கப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. அதன்படி, சேலம், ஜாகீர் அம்மாபாளையத்தில் 100 ஏக்கரில் 881.15 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ளது. இதை நீங்கள் நன்றாக உரக்கப் பேசினீர்கள். நீங்கள் பேசும்போது சந்தோஷமாக இருந்தது. அந்த இடம் யாருடையது தெரியுமா? கனிம வளத் துறைக்குச் சொந்தமானது. அந்தத் துறையும் நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுடையதுதான். விலைமதிப்பு மிக்க அந்த இடத்தை கனிம வளத் துறையிடமிருந்து வாங்குவது மிகவும் சிரமம்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்தப் பூங்காவை எப்படியும் செயல்படுத்த வேண்டுமென்று கூறியபடி சுமார் 881.15 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் ஜவுளிப் பூங்கா அமைக்கப்படும். இது நூறு ஏக்கர் நிலம். அது சிப்காட் நிறுவனத்திற்கு நிலமாற்றம் செய்யப்பட்டது. தற்போது சிப்காட் நிறுவனத்திடமிருந்து, பூங்காவின் தொழில் முனைவோர்கள் பயன்பாட்டிற்கு வழங்கி, பூங்கா அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இது சாதாரண வேலை அல்ல. அந்த கஷ்டம் உறுப்பினர் அவர்களுக்குத் தெரியாது. அதனால் நீங்கள் mikeல் நன்றாக பேசுகிறீர்கள். அதற்காக உறுப்பினர் இராஜேந்திரன் அவர்கள் தினமும் என்னிடம் கோரிக்கை வைப்பார்.

இந்த மானியக் கோரிக்கையில் எனது கருத்துக்களை உறுப்பினர்களுக்கு மனநிறைவாக தந்திருக்கிறேன் என்று நம்புகிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களின் மேலான அனுமதியோடு, இந்த மானியக் கோரிக்கை மீதான புதிய அறிவிப்புகளை நான் இந்த மாமன்றத்தில் படித்ததாகக் கருதி பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக நன்றி சொல்லிவிடுகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் தர்மேந்திர பிரதாப் யாதவ், அவர்களுக்கும், கைத்தறி ஆணையர் கே. விவேகானந்தன், அவர்களுக்கும், துணிநூல் ஆணையர் எம். வள்ளலார், அவர்களுக்கும், Cooptex மேலாண்மை இயக்குநர் டாக்டர் ஆர். ஆனந்த குமார் அவர்களுக்கும், ஏனைய அனைத்து அலுவலர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது துறையைச் சார்ந்த கருத்துகளை உறுப்பினர்கள் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டு, உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துகளை, முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, துறையின் வளர்ச்சிக்கு செயல்படுத்துவோம் என்று தெரிவித்து, உறுப்பினர்கள், இந்த மானியக் கோரிக்கையின்மீது 104 வெட்டுத் தீர்மானங்களை கொடுத்திருக்கிறார்கள். அவை அனைத்தையும் படித்துப் பார்த்திருக்கிறேன். உறுப்பினர்கள் தந்த வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக் கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

### அறிவிப்புகள் - கைத்தறி

10 சதவீதம் அகவிலைப்படி (Dearness Allowance) உயர்வு

தமிழ்நாட்டில் உள்ள 1,114 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு அவ்வப்போது உயர்ந்து வரும் அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசிக்கு ஏற்றவாறு, ஆண்டுதோறும் கூலி உயர்வு வழங்கப்பட்டு வருகிறது.

கைத்தறி நெசவாளர்களின் உடலுழைப்பு மற்றும் உயர்ந்துவரும் குடும்பச் செலவுகளை ஈடுகட்ட ஏதுவாக நடப்பாண்டில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு அவர்கள் பெற்றுவரும் கூலியில் 10 சதவீதம் அகவிலைப்படி உயர்த்தி வழங்கப்படும்.

கைத்தறி நெசவில் புதிய தொழில்நுட்பத்தினை புகுத்தவும், கைத்தறி நெசவாளர்களின் வேலைப்பளுவினை வெகுவாக குறைத்து, அவர்களின் கூலியினை கணிசமான அளவில் உயர்த்தும் நோக்குடனும், கைத்தறி ஆதரவுத் திட்டத்தின் தொழில்நுட்ப மேம்பாட்டு இனத்தின்கீழ் 3000 கைத்தறி நெசவாளர்களுக்கு ரூபாய் 3 கோடி மதிப்பில் தறிகள் மற்றும் தறி உபகர ணங்கள் (Looms and Accessories) வழங்கப்படும்.

### தேசிய அளவிலான கைத்தறிக் கண்காட்சி!

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் விற்பனை மற்றும் சந்தை வாய்ப்புகளை அதிகரிக்கும் வகையில், நடப்பாண்டில் தேசிய கைத்தறி வளர்ச்சித் திட்டம் மற்றும் கைத்தறி ஆதரவுத் திட்டத்தின்கீழ், சென்னை தீவுத்திடலில் ஒரு தேசிய கைத்தறிக் கண்காட்சி ரூபாய் 2 கோடி செலவிலும், கோயம்புத்தூர், சேலம், திருச்சி மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களில் 4 மாநில அளவிலான கைத்தறிக் கண்காட்சிகள் ரூபாய் 1.20 கோடி செலவிலும் நடத்தப்படும்.

### ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் பாவு ஓடுதல்!

விருதுநகர் சரகத்தில், வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தின்கீழ் கைப்பாவுமூலம் பாவு தயார் செய்யப்பட்டு சேலைகள் உற்பத்தி மேற்கொள்ளப்படுகிறது. அப்பகுதியில், உள்கட்டமைப்பு வசதியினை மேம்படுத்தும் விதமாக விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூரில் ரூபாய் 1 கோடி திட்ட மதிப்பீட்டில் பாவு ஓடுதல் மற்றும் கஞ்சி தோய்த்தல் (Warping and Sizing Machines)

10 புதிய கைத்தறிக் குழுமங்கள் (New Handloom Clusters) ரூபாய் 20 கோடி திட்ட உருவாக்கம்.

கைத்தறி நெசவாளர்களின் உற்பத்தித் திறனை அதிகரித்து, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், தமிழ்நாட்டில் கைத்தறி நெசவாளர்கள் அதிகம் உள்ள இடங்களில் 10 புதிய கைத்தறி குழுமங்கள் (New Handloom Clusters) ரூபாய் 20 கோடி திட்ட மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

இதன்மூலம் 2,000 கைத்தறி நெசவாளர்கள் பயன்பெறும் வகையில், தறிக்கூடங்கள் அமைத்தல், மேம்படுத்தப்பட்ட தறி மற்றும் தறி உபகரணங்கள் வழங்குதல் போன்ற உள்கட்டமைப்பு வசதிகள் செய்து தரப்படும்.

## ‘கைத்தறி இரகங்கள் விழிப்புணர்வு பயணத் திட்டம்’ செயல்படுத்தப்படும்!

### விழிப்புணர்வு பயணத் திட்டம்!

இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில், பாரம்பரியம் மற்றும் நுணுக்கமான வேலைப்பாடு கொண்ட புகழ் பெற்ற கைத்தறி இரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

இக்கைத்தறி இரகங்களில் பயன்படுத்தப்படும் நுணுக்கங்கள், வேலைப்பாடுகள் மற்றும் வண்ணங்களை நெசவாளர்கள் தெரிந்துக்கொள்ளும் வகையில், பிரசித்திப் பெற்ற கைத்தறி இரகங்களை உற்பத்தி செய்யும் பிற மாநிலங்களுக்கு கைத்தறி நெசவாளர்களை அழைத்துச் செல்ல ரூபாய் 50 இலட்சம் செலவில் “கைத்தறி இரகங்கள் விழிப்புணர்வு பயணத் திட்டம்” (Exposure Visit) செயல்படுத்தப்படும்.

### திறன் மேம்பாட்டுப் பயிற்சி!

தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல நிலையில் செயல்பட சங்கப் பணியாளர்களது பங்களிப்பு அவசியம் என்பதால், அவர்களின் விற்பனை மற்றும் நிருவாகத் திறனை மேம்படுத்தும் வகையில் ரூபாய் 50 இலட்சம் செலவில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி (Skill Development Training) வழங்கப்படும்.

### மெல்லிய மெத்தைகள் தைக்கும் இயந்திரம்!

கரூர் மற்றும் ஈரோடு பகுதிகளில் அதிகளவில் மெல்லிய மெத்தைகள் (Quilt) உற்பத்திச் செய்யப்பட்டு வருகின்றன.

அப்பகுதிச் சங்கங்களின் செலவினத்தை குறைத்து வருவாயினை அதிகரிக்கும் நோக்கில், கரூர் மற்றும் ஈரோடு பகுதியில் உள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பயன்பெறும் வகையில், ரூபாய் 35 இலட்சம் மதிப்பில் மெல்லிய மெத்தைகள் தைக்கும் இயந்திரம் (Quilt Stitching Machine) கரூர் சரகத்தில் நிறுவப்படும்.

### தேசிய வடிவமைப்பு மையம்!

நீலகிரி மாவட்டத்தில் உள்ள தோடர் பழங்குடியினர், திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள கைத்தறி நெசவாளர்கள் மற்றும் ஆர்வமுள்ள சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு ரூபாய் 50 இலட்சம் செலவில் தேசிய வடிவமைப்பு மையம்மூலம் எம்பிராய்டரி மற்றும் துணி அச்சிடுதல் (Embroidery and Cloth Printing) பயிற்சிகள் வழங்கப்படும்.

### 2 சாயச் சாலைகள்!

வேலூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், திருநெல் வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய பகுதிகளில் இயங்கிவரும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் நூலினைச் சாயமிட ஏதுவாக, வேலூர் மற்றும் நாகர்கோவில் பகுதிகளில் தேசிய கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூபாய் 1.50 கோடி மதிப்பில் 2 சாயச் சாலைகள் (Dye Houses) அமைக்கப்படும்.

### புவிசார் குறியீடு!

தமிழ்நாட்டில் உள்ள கைத்தறி இரகங்களின் பாரம்பரியம், நுட்பமான நெசவு மற்றும் தனித்துவம் ஆகியவற்றை பாதுகாக்க அரசு தொடர் நடவடிக்கை எடுத்து வருகிறது. அதன் தொடர்ச்சியாக, பாரம்பரியம் மிக்க கைத்தறி இரகங்களான 1) சின்னாளப்பட்டி செயற்கைப் பட்டுச் சேலைகள் 2) கூறைநாடு சேலைகள் 3) நாகர்கோவில் வேட்டிகள் 4) உறையூர் சேலைகள் மற்றும் 5) குடியாத்தம் லுங்கிகள் ஆகிய 5 கைத்தறி இரகங்களுக்கு ரூபாய் 15 இலட்சம் செலவில் புவிசார் குறியீடு (G.I.) பெறப்படும்.

### பல வண்ண இங்க்ஜெட் பிரிண்டிங் இயந்திரம்!

தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலையில் துணி வெளுத்தல், சாயமிடல், மெருகேற்றல், அச்சிடல் போன்ற பல்வேறு பதனிடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாலை மாதம் ஒன்றிற்கு 32 இலட்சம் மீட்டர் துணிகளை பதனிடும் திறன் பெற்றுள்ளது.

தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலையின் தொழில்நுட்பத் திறனை மேம்படுத்தி அச்சிடும் தேவையினைப் பூர்த்தி செய்திட ஏதுவாக 90 அங்குல பல வண்ண இங்க்ஜெட் அச்சு இயந்திரம் (Multi Colour Ink Jet Printing Machine) ரூபாய் 1.50 கோடி திட்ட மதிப்பீட்டில் நிறுவப்படும்.

### புத்தாக்கப் பயிற்சி!

தமிழ்நாட்டில் உள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகளை கண்காணித்து திறம்பட செயல்படுத்த தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983 மற்றும் விதி 1988ல் வகுக்கப்பட்டுள்ள சட்ட விதிகளை கைத்தறித் துறையின் அலுவலர்களுக்கு தெளிவான புரிதல் ஏற்படுத்தும் விதமாக ஒரு புத்தாக்கப் பயிற்சி (Refresher Training) முதற்கட்டமாக 350 அலுவலர்களுக்கு ரூபாய் 15 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

### 84 அங்குல இரட்டை அகல மடிப்பு இயந்திரம்!

ஈரோட்டில் உள்ள தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலையில் துணிகளின் மடிப்புத் திறனை ஒரு நாளைக்கு 90,000 மீட்டரிலிருந்து 1,30,000 மீட்டராக அதிகரிக்கும் விதமாக 84 அங்குல இரட்டை அகல மடிப்பு இயந்திரம் (Double Width Folding Machine) ரூபாய் 5 இலட்சம் செலவில் நிறுவப்படும்.

### விற்பனை நிலையம்!

இராஜஸ்தான் மாநிலம், ஜெய்ப்பூரில் கோஆப்டெக்ஸ் நிறுவனத்திற்குச் சொந்தமான 900 சதுர அடி பரப்பளவில், ரூபாய் 66 இலட்சம் மதிப்பீட்டில் புதிய விற்பனை நிலையம் அமைக்கப்படும்.

கைத்தறி இரகங்களை உலகளாவிய சந்தையில் பிரபலப்படுத்தவும், கைத்தறி ஏற்றுமதியை (Export) அதிகரிக்கவும், சர்வதேச கண்காட்சிகளில் பங்கேற்க கோஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு ரூபாய் 1 கோடி நிதி உதவி வழங்கப்படும்.

### புதிய வடிவமைப்பு இரகங்கள்!

இன்றைய நவநாகரிக காலத்தில் வாடிக்கையாளர் தேவைகள் மற்றும் விருப்பங்களுக்கு ஏற்பவும், மாறிவரும் சந்தைத் தேவையைப் பூர்த்தி செய்யவும், வடிவமைப்புகளில் புதுமைகளைப் புகுத்துவது அவசியம் என்பதால், கோஆப்டெக்ஸ் நிறுவனம் மூலம் ரூபாய் 75 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் புதிய வடிவமைப்பு இரகங்கள் (New Designs) அறிமுகம் செய்யப்படும்.

### துணிநூல் துறை!

சென்னையைச் சுற்றியுள்ள அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் பயன்படுத்தப்படாத கட்டடங்களில், துணிநூல் துறை, நகர்ப்புற உள்ளாட்சிகள், ஆயத்த ஆடை உற்பத்தியாளர் மற்றும் ஏற்றுமதியாளர்களுடன் இணைந்து, ஆயத்த ஆடை உற்பத்தி அலகுகள் அமைக்க ஆவன செய்யப்படும்.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின்மூலம், வேலையில்லாத நகர்ப்புற இளைஞர்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு தையல் மற்றும் ஆடை உற்பத்திப் பயிற்சி (Garments Training) வழங்கப்படும்.

### பயிற்சித் திட்டம்!

தொழில்நுட்ப ஜவுளிகள் வளர்ந்துவரும் துறையாக உள்ளதை கருத்தில் கொண்டு, தொழில்நுட்ப ஜவுளி இரகங்கள், அவற்றின் உற்பத்தி செயல்முறைகள், இயந்திரங்கள், தேவைப்படும் முதலீடுகள், சிறப்பு மையங்களால் உருவாக்கப்பட்ட தொழில்நுட்ப ஜவுளித் தயாரிப்புகள் மற்றும் தொழில்நுட்பப் பரிமாற்றங்கள் ஆகியவை குறித்தான குறுகிய காலப் பயிற்சித் திட்டம் (Short Term Training on Technical Textiles) ஆர்வமுள்ள தொழில்முனைவோர்களுக்கு செயல்படுத்தப்படும்.

இப்பயிற்சிக்கு, ஒவ்வொரு தனி நபருக்கும் ஒன்றிய அரசு வழங்கும் பயிற்சிக் கட்டணம் ரூபாய் 10,000/ உடன், பயிற்சி பெறுவோர் பங்களிப்புத்தொகை ரூபாய் 5,000/ஐ தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொண்டு, பயிற்சி வழங்கப்படும்.

### தொழில்நுட்ப ஜவுளிகள் தொடர்பான படிப்புகள்!

தொழில்நுட்ப ஜவுளி மற்றும் உயர் செயல்திறன் கொண்ட ஜவுளிப் பொருட்கள் உற்பத்தி நிறுவனங்களில் திறன்மிகு தொழிலாளர்களின் பற்றாக்குறையைப் போக்கும் பொருட்டு, துணிநூல் துறை தொழில்நுட்பக் கல்வித் துறை மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையுடன் இணைந்து தமிழ்நாட்டில் உள்ள பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் தொழிற் பயிற்சி நிறுவனங்களில் தொழில்நுட்ப ஜவுளி குறித்த படிப்புகள் (Technical Textile Courses) அறிமுகப்படுத்தப்படும்.

தேவையான பாடத்திட்ட வடிவமைப்பு, பாடத்திட்டம் மற்றும் புத்தகங்கள் தொழில்நுட்ப ஜவுளிகளுக்கான சிறப்பு மையங்களுடன் இணைந்து உருவாக்கப்படும்.

### ரேப்பியர் தானியங்கி தறிகள்!

கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், 12 ஏர்ஜெட் தறிகள் மற்றும் 24 விசைத்தறிகளைக் கொண்டு, தமிழ்நாடு மற்றும் அண்டை மாநிலங்களின் அரசுத் துறைகளுக்குத் தேவையான பல்வகையான ஜவுளி இரகங்களை உற்பத்தி செய்து வருகின்றது.

இந்நிறுவனத்தின் ஜவுளி உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கிலும், உற்பத்திச் செலவினங்களை குறைக்கும் நோக்கிலும், தற்சமயம் உள்ள 34 ஆண்டுகள் பழமையான 24 சாதாரண விசைத் தறிகளுக்கு பதிலாக, நடப்பாண்டில் புதியதாக இரண்டு ரேப்பியர் வகை தானியங்கி தறிகள் (New Rapier Auto Looms) நிறுவப்படும்.

### சந்தைக்கான வாய்ப்புகள்!

தொழில்நுட்ப ஜவுளிகள், ஜவுளித் தொழிலின் வேகமாக வளரும் ஒரு பிரிவாகும். நமது மாநிலத்தில் விளையாட்டு துறையில் அதிகரித்துவரும் முக்கியத்துவத்தினை கருத்தில்கொண்டு, விளையாட்டு துறைசார் ஜவுளிகளின் (Sport Tech and Athleisure Dresses) உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துதலுக்கான வளர்ச்சி வாய்ப்புகள் குறித்தான விரிவான ஆய்வு (Detailed Study) மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அமைச்சர் ஆர்.காந்தி தமது பதிலுரையில் குறிப்பிட்டார்.

---

மாதவரம் சட்டமன்றத் தொகுதியில்

# போட்டித் தேர்வுக்கான பயிற்சி மையம் அமைக்கப்படுமா?

## சட்டப்பேரவையில் மாதவரம் எஸ்.சுதர்சனம் கேள்வி!

சென்னை, ஜூலை 1 - மாதவரம் தொகுதியில் போட்டித் தேர்வுக்கான பயிற்சி மையம் அமைக்கப்படுமா என்று சட்டப் பேரவையில் மாதவரம் எஸ். சுதர்சனம் கேள்வி எழுப்பினார்.

இது தொடர்பாக நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**மாதவரம் எஸ்.சுதர்சனம் :** மாதவரம் தொகுதியில் போட்டித் தேர்வுக்கான பயிற்சி மையம் அமைக்க அரசு முன் வருமா?

**அமைச்சர் தங்கம் தென்னரசு:** மாதவரம் சட்டமன்றத் தொகுதியில், போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி மையம் அமைப்பது தொடர்பான உத்தேசம் அரசிடம் தற்போது இல்லை.

**மாதவரம் எஸ்.சுதர்சனம் :** சென்னை மாநகரில் இரண்டு போட்டித் தேர்வுக்கான பயிற்சி மையங்களும், கோவை, மதுரை, சேலம் ஆகிய மாவட்டங்களில் தலா ஒரு பயிற்சி மையங்களும் இப்பொழுது இருக்கின்றன. சென்னை மாநகரம் சுமார் 85 இலட்சம் மக்கள் தொகையைக் கொண்ட மாநகரம். பல்வேறு தேர்வாணையங்கள் நடத்தும், அதாவது ஒன்றியப் பணியாளர் தேர்வாணையம், இரயில்வே தேர்வு வாரியம், வங்கிப் பணியாளர் தேர்வுக் குழுமம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் உள்ளிட்டவை நடத்தும் போட்டித் தேர்வுகளில் நிறைய இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் இப்பொழுது பங்கு பெறுகிறார்கள். *Constable* பதவிக்குக் கூட இப்போது தேர்வு வைக்கிறார்கள். *GroupIV, GroupIII and GroupII* ஆகிய பதவிகளுக்காக இப்போது போட்டித் தேர்வுகள் நடத்தப்படுகின்றன. சென்னையில் இருக்கின்ற



தேர்வு பயிற்சி மையங்கள் போதுமானதாக இல்லை. ஆகவே, ஏழையெளிய மக்கள் வசிக்கின்ற மாதவரம் தொகுதியில், இதுபோன்ற பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டால், ஏழையெளிய மாணவர்கள் பயிற்சி பெற்று வேலைக்குச் செல்லக் கூடிய வாய்ப்புப் பெருகும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். தங்கள் மூலமாக இதற்கு முக்கியத்துவம் தரப்பட்டு, பயிற்சி மையங்கள் அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**அமைச்சர் தங்கம் தென்னரசு:** பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதைப் போல, சென்னையில் ஏற்கெனவே வண்ணாரப்பேட்டையில் சர் தியாகராயா கல்லூரியில் ஒரு பயிற்சி மையம் இருக்கிறது. அதேபோல், நந்தனத்தில் இருக்கக்கூடிய கல்லூரியிலும் ஒரு பயிற்சி மையம் தொடங்கப்பட்டு செயல்பட்டுக் கொண்டு வருகிறது. மதுரை, கோயம்புத்தூர், சேலம் போன்ற இடங்களிலும் இத்தகைய போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி மையங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. சென்னையைப் பொறுத்தமட்டில், போட்டித் தேர்வு களுக்கான பயிற்சி மையங்களோடு, குடிமைப் பணி தேர்வுகளுக்கான மையம் ஒன்றும் இங்கு இயங்கி வருகிறது. அதில் முதல்நிலைத் தேர்வாக இருந்தாலும், முதன்மைத் தேர்வாக இருந்தாலும் நம்முடைய மாணவர்கள் ஏறத்தாழ 300 பேர்களுக்கு பயிற்சி கொடுப்பதற்கான ஏற்பாடுகள் அங்கு ஏற்கெனவே செய்யப்பட்டுள்ளன. அங்கு அவர்கள் உறைவிடப் பயிற்சியும் மேற்கொள்வதற்கான வசதிகள் செய்யப்பட்டிருக்கிறது. பொதுவாக இத்தகைய போட்டித் தேர்வு களில் ஈடுபடக்கூடிய மாணவர்கள் நிறைய பேர் வருவதை அரசு கருத்தில் கொண்டிருக்கிறது.

எனவேதான், பல நூலகங்களிலும்கூட இப்போது, இந்தப் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யக்கூடிய மாணவர்களுக்கான வசதிகளுக்கான சீரான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

சென்னையில் இருக்கக்கூடிய அண்ணா நூற்றாண்டு நூலகத்தை பெரும்பான்மையான மாணவர்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, முதலமைச்சர் அவர்களின் கனவுத் திட்டமான, ‘நான் முதல்வன்’ திட்டத்தின் அடிப்படையிலும் நிறைய பேருக்கு அதற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதனடிப்படையில் நம்முடைய இளைஞர்களுக்கு உரிய வேலை வாய்ப்புகளைத் தருவதற்கு, முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கக்கூடிய திட்டங்களுக்கு உறுதுணையாக இத்தகைய போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி மையங்கள் அமைப்பதில் அரசு ஆர்வம் காட்டியிருக்கிறது. எதிர்காலத்தில் அத்தகைய தேவைகளை கூடுதலாக உருவாக்க வேண்டிய சூழல்கள் ஏற்படுமேயானால், அப்போது உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு நிச்சயமாகக் கனிவோடு கவனிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாதவரம் எஸ்.சுதர்சனம் :** அமைச்சர்கள் தன்னுடைய பதிலில், நூலகங்களெல்லாம் மாணவர்களுக்கு பயிற்சி மையங்களாகப் பயன்படுகின்றன என்று சொன்னார்; உண்மைதான். அண்ணா நூற்றாண்டு நூலகம் பெரிய அளவில் சென்னை மாநகரில் உள்ள இளைஞர்களுக்கு தற்போது பயன்பட்டு வருகிறது. ஆனால், அந்நூலகம், தென் சென்னையில் தூரத்தில் அமைந்துள்ளது. எனவே, வட சென்னையில் அது போன்ற பெரிய அளவிலான ஒரு நூலகத்தை அமைத்துக் கொடுக்க வேண்டும். ஏனெனில், பெரிய நகரம், 85 இலட்சம் மக்கள் தொகையை கொண்ட சென்னை மாநகரத்தில், வட சென்னை பகுதியில் குறிப்பாக மாதவரம் போன்ற பகுதியில் இதுபோன்ற ஒரு நூலகத்தை அமைத்துத் தர வேண்டும். நேற்றுகூட முதலமைச்சர் அவர்கள், அறிவுசார் மையம் இந்த ஆண்டு திருச்சியிலும், அடுத்த ஆண்டு சேலத்திலும் நிச்சயமாக உருவாக்கப்படும் என்று உறுதியளித்திருக்கின்றார்கள். அந்த வகையில் வட சென்னையில், மாதவரம் போன்ற பகுதிகளில் நூலகமும், அறிவுசார் மையமும் அமைத்துத் தரப்படுமா?

**அமைச்சர் தங்கம் தென்னரசு:** வட சென்னையினுடைய வளர்ச்சியிலே முதலமைச்சர் அவர்களுடைய தலைமையிலான கழக அரசு மிகுந்த அக்கறையும், ஆர்வமும் கொண்டிருக்கிறது. எனவேதான், வட சென்னை வளர்ச்சிக்காக ஒரு தனித் திட்டம் வகுக்கப்பட்டு, அதற்கான உரிய நிதி ஒதுக்கீடுகள், அத்திட்டங்கள் முடுக்கி விடப்பட்டிருக்கின்றன. உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டி ருப்பதைப் போல, சென்னை, மதுரை மட்டுமல்லாமல், கோவையிலும், சேலத்திலும் அத்தகைய அறிவுசார் மையங்கள், நூலகங்கள் திருச்சியில் அமைக்கப்படவிருப்பதைப்போல அமைக்கப்படும் என்பதை முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அந்த வகையில், நிச்சயமாக முதலமைச்சர் அவர்களுடைய கனிவான கவனத்திற்கு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையும் எடுத்துச் செல்லப்பட்டு, எதிர்காலத்தில் அது உரிய வகையில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.